பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 29 (13—8—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 30 (14—8—68) புதன் [இதழ்: 51

போராட்டத்திற்குத் தயாராகின்றனர்?

★

கோஹிமா, ஆக. 13—

கலக நாகர்கள் நீண்ட நாள் போராட்டத்துக்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

இப்போரில் தாங்கள் பூண்டோடு அழிக்கப்படலாம் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், நாடு கடத்தப்பட்டு இலண்டனில் வாழும் பிஜோவுக்கு, நாகாலாந்தின் நலனுக்கு வெளிநாட்டிலிருந்து போராடுமாறு எல்லா அதிகாரங்களும் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியை இங்கு அனுமதியோம்!

கழக அரசின் உறுதியை எவரும் எவ்விதத்திலும் தளர்த்த இயலாது

முதலமைச்சர் அண்ணாவின் திட்டவட்ட அறிவிப்பு

உறுதியில் திளைக்குமாறு தமிழகத்திற்கு வேண்டுகோள்

சென்னை, ஆக. 13—

"'இந்தியை அனுமதிக்க முடியாது' என்ற தமிழக அரசின் உறுதியை எவரும் தளர்த்திவிட முடியாது; அரசியல் சட்டத்தில் உள்ள அதிகாரத்தைக் கொண்டு வேண்டுமானால், 'இந்தியை ஏற்றுக்கொள்கிறாயா? அல்லது வெளியில் போகப் போகிறாயா?' என்று கேட்கலாம்; அப்படிக் கேட்கும்போது, நான், 'போகிறேன்' என்று சொல்லமாட்டேன்; 'அனுப்புங்கள்' என்றுதான் சொல்லுவேன்.

"தமிழுக்கு எதிராக எந்தச் சக்தி செயல்பட்டாலும், எத்தகைய வலிமை பயன்படுத்தப்பட்டாலும், வன்முறைகள் தலைதூக்கினாலும் அவைகளைத் தடுத்து நிறுத்திட எங்களுடைய முழுவலிவும் பயன்படுத்தப்படும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

"இத்துறையில், தமிழக அரசை நடத்துகின்றவர்கள் மட்டும் உறுதியாக இருந்தால் வெற்றி கிடைத்துவிடும் என்று கூறிவிட முடியாது; சமூகம் முழுவதும் அந்த உறுதியில் திளைக்கவேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று பச்சையப்பன் கல்லூரியில் சொற்பொழிவாற்றுகையில் திட்டவட்டமாகத் தெரிவித்து, தமிழக மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். டாக்டர் மு. வரதராசனார் உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் மேலும் அவர் இதுபற்றி விளக்கியதாவது:—

அந்தப் பிரச்சினை இன்னும் முடிவு பெறவில்லை!

அண்மையில் நான் டெல்லி பெரிய அதிகாரி ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன்; 'என். சி. சி.-யில் இந்திச் சொற்கள் இருப்பதை நீக்கவேண்டும்' என்ற பிரச்சினைப்பற்றி அவருடன் விவாதித்துக்கொண்டிருந்தேன்; இந்தப் பிரச்சினைக் குறித்து டெல்லிக்கும்—நமக்கும கடிதப் போக்குவரத்துகள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன; 'என். சி. சி.-யில் பத்து இந்திச் சொற்கள்தான் இருக்கின்றன— அவைகளை ஏற்றுக்கொள்ளலாமே' என்று அவர்கள் கூறுகிறார்கள். 'பத்தே பத்து சொற்கள்தானே? அவைகளை நீங்களே எடுத்துவிடலாமே?' என்று நாம் கூறிக்கொண்டிருக்கிறோம்; ஆக, அந்தப் பிரச்சினை இன்னும் முடிவு பெறவில்லை!

ஒரே ஒரு வழிதான் அவர்களுக்கு உண்டு

இதுபற்றி அந்த டெல்லி பெரிய அதிகாரி என்னிடம், 'என்.சி.சி. யில் இந்திச் சொற்கள் இருப்பதை இங்குள்ள மாணவர்கள் எதிர்க்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார்; 'எனக்கு அது தெரியாது' என்றேன்; 'எங்கள் கொள்கை இரு மொழிக் கொள்கை; இந்த இரு மொழிக் கொள்கையில் ஒரு அம்சம், 'என்.சி.சி.-யில் இந்திச் சொற்கள் கூடாது' என்பதாகும்; எங்கள் அரசு இருக்கின்ற வரையில் இரு மொழிக் கொள்கை இருந்தே தீரும்; என்.சி.சி.-யில் இந்திச் சொற்கள் இருக்க வேண்டும் என்றால், என்.சி.சி. வேண்டாம்; இதில் நாங்கள் உறுதியாக இருப்போம்' என்று அவரிடம் விளக்கிக் கூறினேன்; 'இந்திச் சொற்கள் இருப்பதை எதிர்க்காமல் இருப்பதற்கு வேறு வழி ஏதும் கிடையாதா?' என்று அவர் கேட்டார்; அதற்கு நான், 'ஒரே வழிதான் இருக்கிறது; என்னை மாற்றிவிடுங்கள்; என்னுடைய அரசு இருக்கின்ற வரையில் இந்தக் காரியம் நடக்காது' என்றேன்; மேலும் அவரிடம் விளக்கிக் கூறினேன்—

"நான் இந்த இடத்திலிருந்து மாற்றப்படுவேனால் அடுத்த அரசு வரும்; அந்த அரசு 'இந்தி வந்தால் பரவாயில்லை' என்று ஆதரவளிக்கும்; அந்த அரசு வரும் வரை நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும். அப்படி அந்த அரசு வருமென்று நம்பிக்கை இருக்குமானால், அதுவரையில் நீங்கள் பொறுமையுடன் இருக்கத்தான் வேண்டும்; நாங்களும் 20 ஆண்டுக்காலம் பொறுமையோடு காத்துக் கொண்டிருந்துதான் இந்த இடத்திற்கு வந்தோம்; அதுபோல நீங்களும் அதுவரை காத்திருக்க வேண்டும்' என்று.

உறுதியிலிருந்து தளரமாட்டோம்!

இந்த அரசு இருக்கின்ற வரையில், இந்திப் பிரச்சினையில் நாங்கள் உறுதியாக இருப்போம்; ஆனால், இதனால் மட்டும் வெற்றி கிடைத்துவிடும் என்று உறுதி கூறிவிட முடியாது!

காற்றாகப் பறக்கின்ற புரவியாகக் கூட இருக்கலாம்; அதை ஓட்டுகின்ற சாரதிகூட திறமையானவராக இருக்கலாம்; பாதையும் சரியாக இருக்கலாம்; தேர்கூட உறுதியாக இருக்கலாம்; ஆனால் அந்தத் தேர் வேகமாகச் செல்கின்ற நேரத்தில் பாதையிலே ஒரு பள்ளம் இருக்குமானால், பயணம் தொடராது; போக வேண்டிய இடத்திற்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் போகலாம்; ஆனால் உறுதியிலிருந்து மட்டும் நாங்கள் தளர மாட்டோம்!"

தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர்

ஆதித்தனார் பதவி விலகல்

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 12—

தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவர் ஆதித்தனார் பதவி விலகியது குறித்து, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டனர்; இது குறித்து அண்ணா கூறியதாவது:—

"கடந்த சில மாதங்களாகவே பதவி விலக ஆதித்தனார் விருப்பம் தெரிவித்துவந்தார்; அதன் பயனாக—முழு நேர ஊழியராகக் கழகப் பிரசார அலுவல்களைக் கவனிக்கவும், கழக வளர்ச்சி வேலைகளைக் கவனிக்கவும் அவர் விரும்பினார்.

"சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும் இருந்துகொண்டு, கழகப் பணியிலும் ஈடுபடுவதென்பது இயலாது. கழகப் பணியில் தீவிரப் பங்கெடுத்துக் கொள்ள அவர் விரும்பினார். இந்தப் பதவி விலகல் அந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கிறது."

இன்று மாலை ஆதித்தனாரும், சட்டமன்றத் துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தனும் முதலமைச்சர் அண்ணாவை அவரது இல்லத்தில் சந்தித்து ஒருமணி நேரம் கலந்துரையாடினர்.

புதிய அவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அப்பொறுப்பை புலவர் கோவிந்தன் அவர்கள் கவனித்துவருவார்.

சிவசேனைத் தலைவருக்குத் தண்டனை

பம்பாய், ஆக. 12—

சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே குற்றவாளி எனக் கருதி ரூ. 100 அபராதமோ கட்டத் தவறினால் 15 நாள் சிறைத் தண்டனையோ அனுபவிக்க வேண்டுமென்று மாஜிஸ்திரேட்டால் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த நவம்பர் மாதம் 12-ந் தேதி ஆத்திரமூட்டத்தக்க முறையில் பால் தாக்கரே பொதுக்கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றியதாக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மேல் கோர்ட்டிற்கு மனுச் செய்யப் போவதாகக் கூறி, தம் மீது விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்குமாறு பால் தாக்கரே கேட்டுக்கொண்டதை மாஜிஸ்திரேட் ஏற்றுக்கொண்டார்.

மாவட்டக் கழகத் தேர்தல்

இன்று (14—8—68) காலை 10-மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி மாவட்டக் கழகத் தேர்தல்கள் முறைப்படி நடைபெறும்; மாவட்டம், இடம், ஆணையாளர் ஆகிய விவரங்கள் வருமாறு:—

மாவட்டம்	இடம்	ஆணையாளர்கள்
செங்கற்பட்டு	கரிச்கினில் அமர்ந்தவள் கோயில் அருகிலுள்ள நடராசா அரிசி ஆலை, காஞ்சிபுரம்	வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல்.
திருச்சி	தமிழ்ச் சங்கக் கட்டிடம், மேலப்புலிவார் ரோடு, திருச்சி	மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி. (முன்னாள் மேயர்)
தஞ்சை	இராமநாதன் செட்டியார் மண்டபம், தஞ்சை	நா. கணபதி பி.எஸ்சி.பி.எல்.
மதுரை	திருமண மண்டபம், ஆழ்வார்புரம், மதுரை	அ. பொ. அரசு எம்.எல்.ஏ., (முன்னாள் மேயர்)
தருமபுரி	பயணியர் விடுதி, அதமன்கோட்டை	கே. எம். கண்ணபிரான்
முகவை	பயணியர் விடுதி, மானாமதுரை	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
நெல்லை	குறுக்குத்துறை, திருமண மண்டபம்	அப்துல் காதர் பி.எஸ்சி. (முன்னாள் மேயர்)

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில்....

தமிழுக்குத் தரப்படும் மதிப்பு--- உரிமை இந்தியாவில் தரப்படவில்லை

உரிமையைப் பெறும் தகுதி எங்களுக்கு இல்லையா?

நடைமுறையிலுள்ள சிக்கலைக்காட்டி தப்பிக்கஇயலாது

நியாயத்திற்கு அப்பாற்பட்ட அமைச்சரின் விசித்திர வாதம்--- நாடாளுமன்றத்தில் இரா. செழியன் உரிமை முழக்கம்

புதுடில்லி, ஆக. 9—

“நாடாளுமன்றத்தில் இந்தி, ஆங்கிலம் ஆகிய இருமொழிகள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் முறையை மாற்றி, தமிழ்போன்ற மற்ற எல்லா மொழிகளுக்கும்— எட்டாவது அட்டவணையில் உள்ள 14 தேசிய மொழிகளுக்கும் நாடாளுமன்றத்தில் ஒத்த வாய்ப்பு தரப்படவேண்டும்” என்று அரசியல் சட்டத்தின் 120-வது பிரிவைத் திருத்துவதற்காகத் தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன் தந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவின்மீது, மக்களவையில் இன்று விவாதம் மீண்டும் துவங்கியது. ஜூலை 26-ஆம் நாள் இந்த விவாதத்தைத் தோழர் இரா. செழியன் துவக்கி வைத்துப் பேசினர். (அந்த உரை 'நம் நாடு' இதழில் முன்னர் வெளியிடப்பட்டுள்ளது).

விவாதத்தில், மக்களவையில் உள்ள எல்லாக் கட்சியினரும் கலந்துகொண்டனர்; காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிவநாராயண், சேத் கோவிந்த தாஸ், ஓங்கார்லால் போகா, சிந்தாமணி பானிக்ரகி, ரண்தீர் சிங் ஆகியோரும், மற்றும் திரு. ஜெகனுத ராவ் ஜோஷி (சனசங்கம்), திரு. கந்தப்பன் (தி. மு. க.), பேராசிரியர் இரேன் முகர்ஜி (கம்யூனிஸ்டு), விசுவநாத மேனன் (பி.எஸ்.பி.), ஜே. எச் படேல் (எஸ்.எஸ்.பி.), தென்னேட்டி விசுவநாதன் (சுயேச்சை), அப்துல் கனிதார் (சுயேச்சை) ஆகியோர் விவாதத்தில் பங்கு பெற்றனர். இவர்களில் திரு. சிவநாராயண் (காங்கிரசு), ஒருவரைத் தவிர, மற்ற உறுப்பினர்கள் அனைவரும் தோழர் செழியன் கொண்டுவந்த மசோதாவை வரவேற்று ஆதரித்துப் பேசினர்.

ஆனால், ‘எல்லாத் தேசிய மொழிகளுக்கும் நாடாளுமன்றத்தில் ஒத்த வாய்ப்பு வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தை ஒத்துக்கொள்ள முடியாது’ என்று உள்துறை அமைச்சர் திரு. வி. சி. சக்லா கூறி, இந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவை எதிர்த்தார்.

விவாத முடிவில் தோழர் செழியன் பதில் தந்து, கொள்கை அளவிலாவது மசோதாவின் கருத்தை அரசாங்கம் ஒப்புக்கொண்டால் அதாவது, ‘15 தேசிய மொழிகளுக்கும் நாடாளுமன்றத்தில் ஒத்த வாய்ப்புத் தரப்படவேண்டும்’ என்ற கருத்தை ஒப்புக்கொண்டால் போதும்—தாம், தமது மசோதாவை வலியுறுத்தாமல் இருப்பதாகக் கூறினர்.

உள்துறைத் துணையமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி—தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்—உள்துறை அமைச்சர் சார்பாக அங்கு இருந்தார்; தோழர் செழியனின் வேண்டுகோளுக்கு அவர் ஒப்புதல் தரவில்லை.

துணைத் தலைமையமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் எழுந்து, ‘கொள்கை அளவில் இதை நான் எதிர்க்கிறேன்’ என்று கூறினர்.

மசோதா ஓட்டுக்கு விடப்பட்டது. எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஆதரவு தந்தன; காங்கிரசுக் கட்சியினர் எதிர்த்தனர். மசோதா தோல்வியுற்றது.

விவாதத்தில் கலந்துகொண்டவர்கள்—ஒருவர் தவிர, மற்றவர்கள் அனைவரும்—கட்சிப் பாகுபாடு இன்றி ஆதரவு தந்ததால், ‘தோழர் செழியனின் மசோதாவை அமைச்சர் ஏற்றுக்கொள்வார்; நடைமுறையில் உடனடியாக அமுல்படுத்தாவிட்டாலும், கொள்கையளவில் ஒத்துக்கொள்வார்’ என்று பலர் எதிர்பார்த்தனர்; அவைத் தலைவராக இருந்தவர்கூட, ‘இந்த மசோதாவின் கருத்தை எல்லோரும் ஆதரிக்கிறார்கள்; அமைச்சரும் ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்; எனவே, அதிக நேரம் விவாதிக்க வேண்டிய அவசியமிருக்காது என்று நினைக்கிறேன்’ என்று ஒரு கட்டத்தில் கூறினர்.

ஒன்றரை மணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்த விவாதத்தில், அவையில் உள்ள மிகப் பலர் பேச முன்வந்ததால், இரண்டரை மணி நேரம் கடந்தும் முடிவடையாமல், மேலும் சிலர் பேச எழுந்த நேரத்தில் அவைத் தலைவர் அவ்வாறு கூறினர். ஆனால் பிடிவாதமான முறையில், உள்துறை மாநில அமைச்சர் சுக்லாவும், துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயும் மசோதாவை எதிர்த்தனர். அதன் பிறகு காங்கிரசுக கட்சியினர் மசோதாவைத் தோற்கடித்துவிட்டனர்.

ஓரளவுக்கேனும் புரிந்துகொள்ளுகிறார்களாம்

விவாதத்தில் கலந்துகொண்ட திரு. சிவநாராயண் (காங்) மசோதாவை எதிர்த்துக் கூறியதாவது:—

“இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இந்தியை எல்லோரும் ஓரளவுக்காவது புரிந்துகொள்கிறார்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியதில்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தேசிய மொழி இருக்கிறது. அதைப் போல் இந்தியாவுக்கும் ஒரு தேசிய மொழி வேண்டும். அது, ‘இந்தி’ என்று அரசியல் சட்டத்தில் உள்ளது. மொழிச் சண்டையை உண்டாக்காமல், அரசியல் சட்டத்தில் உள்ளதை நாம் ஏற்றுக்கொண்டு அமுல் படுத்த வேண்டும்.”

ஜனசங்க உறுப்பினர் திரு. ஜெகனுதராவ் ஜோஷி பேசும்பொழுது கூறியதாவது:—

மற்ற வட்டார மொழிகட்கும் வாய்ப்புத் தரவேண்டாமா?

“இந்த மசோதா அரசியல் சட்டத்தை அவமதிப்பதாகாது; ‘இப்பொழுது இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டுக்கும் தரப்படும் வாய்ப்பை மற்ற வட்டார மொழிகளுக்கும் தரவேண்டும்’ என்றுதான் கூறுகிறது.”

துவக்கத்தில் அவர், ‘ஆங்கிலம் இந்தி, வங்காளம், தென்னாட்டு மொழிகளில் ஒன்று என நான்கு மொழிகளுக்கு வகை செய்யலாம்’ என்று கூறினர்.

‘இந்தி வெறியரும்’கூட மசோதாவை ஆதரித்தார்

பிரபல இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ் அவர்கள்கூட ‘தோழர் செழியனின் மசோதாவை ஆதரிக்கிறேன்’ எனக் கூறினர்.

இந்தியுடன் மற்ற வட்டார மொழிகளுக்கும் இடம் தரவேண்டும் என்பதைத் தாம் ஒப்புக்கொள்வதாகவும், ஆனால் ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

நிலைமையை மறுப்பது அறிவுடைமையாகா!

தி. மு. கழக உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“ஒரு நாடு—ஒரு மொழி என்ற வாதம் இந்தியாவுக்குப் பொருந்தாது. இந்தியாவில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றனர். உள்ள நிலைமையை மறுப்பது அறிவுடைமை ஆகாது.

இப்பொழுது ஒரே சமயத்தில் இரு மொழிகளில் பேச்சுகள் தரப்படும் மொழிபெயர்ப்பு முறையை நாங்கள் கேட்ட நேரத்தில், அதற்கும் எதிர்ப்பு வந்தது. தி. மு. கழகத்தைச் சேர்ந்த நாங்கள் அப்பொழுதே, ‘எல்லா மொழிகளுக்கும் ஒத்த வாய்ப்புத் தரவேண்டும்’ என்று வாதாடினோம்; ‘ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுவது ஒரு துவக்கமாக இருக்கட்டும்; போகப்போக மற்ற மொழிகளுக்கும் இடம் தரலாம்’ என்று எங்கள் ஆதரவைத் தந்தோம்.

“இந்தி, ஆங்கிலம் இரண்டும் தெரியாதவர்கள் இம்மாமன்றத்தில் 100 பேருக்குக் குறையாமல் இருப்பார்கள். அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முடியாமல் அவர்களை விட்டு வைப்பது சரியல்ல.

“அரசியல் சட்டத்தை நாம் திருத்தியாகவேண்டும். இந்திக்கு மட்டும் சலுகைகளைத் தருவதில் தான் இந்த அரசாங்கம் முனைப்பாக இருக்கிறதே தவிர மற்ற மொழிகளின் சங்கடங்களை உணர மறுக்கிறது. இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு பேச்சுக்களையும் ஒரே புத்தகத்தில் போட்டுக் குழப்பம் தராமல், தனித் தனியாக ஒரே மொழியில் விவாதங்களை வெளியிட வேண்டும்.

இந்த அவையில் 14 மொழிகளுக்கும் வாய்ப்பு தருவதுடன், அவற்றுக்கு மொழிபெயர்ப்பு வசதிகளையும் அரசாங்கம் உடனடியாகச் செய்யவேண்டும்.”

சங்கடம் இருப்பதால் கொள்கையை மறுப்பதா?

காங்கிரசுக் கடசியைச் சேர்ந்த திரு ஓங்கார்லால் போசரா என்பவா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“இந்த மசோதாவின் கருத்தை— அவையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தாய்மொழியில் பேசுவதற்கான வாய்ப்பை நாம் தரவேண்டும் என்ற உணர்ச்சியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சனநாயக நாட்டில் -- சனநாயக அரசில் இது முக்கியமான உரிமை.

14 மொழிகளுக்கும் இங்கு இடம் தந்தால், மொழிபெயர்ப்பு களைத் தருவதில் சங்கடம் ஏற்படலாம்; அந்தச் சங்கடம் இருப்பதால், கொள்கையை மறுக்கக்கூடாது. அந்த மொழிபெயர்ப்புச் சங்கடத்தை எப்படித் தீர்க்கலாம் என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும்.”

நீண்ட காலத்துக்கு நீடிக்க முடியாது!

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் எச். என். முகர்ஜி, ‘கொள்கையளவிலாவது இந்த மசோதாவை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

“இந்தியாவில் சனநாயகம் வளர வேண்டுமென்றால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தத்தம் தாய்மொழியில் பேசும் வாய்ப்புத் தரப்பட வேண்டும்.

இப்பொழுதுள்ளபடி, இந்தி— ஆங்கிலம் இரண்டும் மட்டும் தான் என்று இருப்பதை நீண்ட காலத்துக்கு நீடித்துவைக்க முடியாது.

14 மொழிகளையும் ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று மொழிபெயர்ப்பது கடினமானது என்றால், எல்லா மொழிகளையும் பேச அனுமதித்து --- மொழிபெயர்ப்பதை மட்டும் தற்பொழுதைக்கு ஆங்கிலம் — இந்தி ஆகிய இரண்டுடன் வைத்துக் கொள்ளலாம்.

கொள்கையளவில் இந்த மசோதாவை எவரும் எதிர்க்க முடியாது; நடைமுறையில் ஏதாவது இடைஞ்சல்கள் இருந்தால், அவற்றைப பிறகு நாம் கவனிக்க வேண்டும்.”

எழுத்து மூலமாக ஒப்புவது அவசியம்

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரசுக்காரர் திரு சிந்தாமணி பானுகிரகி இந்த மசோதாவை முழுமனத்துடன் வரவேற்று, ‘அரசாங்கமும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்’ என்று கூறினர்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“இந்தக் கருத்தை நாம் இதற்கு முன்னதாகவே எற்றுக்கொண்டிருக்கிறோம். மசோதா முறையில் வரும் இதை இப்பொழுது எழுத்து மூலமாக ஒப்புக்கொளள வேண்டும்--அவ்வளவு தான்!”

ஒருமைப்பாடு என்பது அவசியமானல்....

கேரளத்தைச் சேர்ந்த சோஷலிஸ்டு உறுப்பினர் திரு. விசுவநாத மேனன் பேசியதாவது:—

“மொழிப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. மொழிகளுக்குச் சம உரிமை -- சம மதிப்பு இந்த மன்றத்தில் தரப்பட வேண்டும்.

கேரளத்திலிருந்து வரும் ஒருவர், மலையாளத்தில் பேச வாய்ப்பு இருக்கவேண்டும்; அவர் பேசுவதை மற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

‘நாடாளுமன்றக் கூட்டத்தைத் தெற்கில் கூட்டவேண்டும்’ என்ற கோரிக்கை கிளம்பியுள்ளது; அதை அரசு ஆராய்வதாகவும் தெரிகிறது.

அதைவிட முக்கியமானது, இந்த இடத்தில் தேசிய மொழிகள் எல்லாவற்றுக்கும் வாய்ப்பு அளிப்பதாகும்.

தேசிய ஒருமைப்பாடு என்று கூறுவது உண்மையானல், இந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.”

‘காப்பி’ அடிக்கும் அரசு இதற்கு மட்டும் மறுப்பானேன்?

மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த திரு. ஜே.எச்.படேல் (எஸ் எஸ்.பி.) தமது உரை முழுவதையும் கன்னட மொழியில நிகழ்த்தினர்; அவர் குறிப்பிட்டதாவது:—

“அரசாங்கம் எதை எதையோ வெளிநாட்டிலிருந்து பார்த்து ‘காப்பி’ அடிக்கிறது!

வெளிநாட்டிலிருப்பதைப் பார்த்து, அசோகா ஓட்டலில் சுழல் மாடம அமைக்கிறது!

ஜெர்மனியில் உள்ளதைப் போன்ற குளிக்கும் அறையை ராஷ்டிர பவனத்தில் கட்டுகிறது!

ஆனல், இரஷ்யாவில் உள்ள மொழிபெயர்க்கும் முறையை இங்கு கொண்டுவர மட்டும் மறுக்கிறது -- இது ஏனே தெரியவில்லை!”

ஒருமைப்பாடு வளர வழிவகுப்பதாகாதா?

அரியானவைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர் திரு. ரனதீர் சிங் தோழர் செழியனின் மசோதாவை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“எல்லா உறுப்பினர்களுக்கும் தத்தம் தாய்மொழியில் பேசக்கூடிய வசதி இருககவேண்டும். அந்தப் பேச்சுக்களை மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் மொழிபெயர்ப்பு வசதியும் இருக்கவேண்டும். அதனல் சம மதிப்பு உண்டாவதுடன், ஒரு

(3-ம் பக்கம் பார்க்க)

இந்திக்காரர்களுக்கு உள்ள உரிமை மற்றவர்களுக்கு ஏன் இல்லை?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பாடு வளரவும் வழிசெய்யும். இந்த மசோதாவை வரவேற்கிறேன்; அரசாங்கம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

சனநாயகத்தையே அவமதிக்க முயலாதீர்!

திரு. திண்கர் தேசாய் (கம்.) பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"ஒருவர் தமது தாய்மொழியில் பேசும்பொழுது, அவர் பேசுவதை மற்றவர்களுக்கு மொழி பெயர்த்துத் தராவிட்டால், அது அவரை அவமதிப்பதாகும்; அவரது மொழியை அவமதிப்பதாகும்; அவரது மாநிலத்தை அவமதிப்பதாகும்; அவரைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பிய மக்களை அவமதிப்பதாகும். அது சனநாயகத்தையே அவமதிப்பதாகும்.

தாய்மொழியில் பேச அனுமதி தரப்படாத வரையில், சனநாயகம் முழுமை பெருது.

மொழிபெயர்ப்பது ஒன்றும் நடைபெற முடியாதது அல்ல. இரஷ்யாவில் உள்ள முறையை இங்கு பயன்படுத்தலாம்."

பேசுவதைச் செயலில் காட்டினுல் என்ன?

ஆந்திராவைச் சேர்ந்த திரு. தெனனேட்டி விசுவநாதம் அவர்கள் பேசியதாவது :—

"இந்த மசோதாவின் நோக்கம் முக்கியமானது; ஒத்த மதிப்பு—ஒத்த தன்மை எல்லா மொழிகளுக்கும் தரப்பட வேண்டும்.

மொழி அடிப்படையில் மாநிலங்களை நாம் பிரித்துக் கொண்டுள்ளோம். 'எல்லா மொழிகளையும் ஒரேவிதமாகப் பாராட்டுவோம' என்று பேசுகிறோம்; பேசுவதை செயலில் காட்டினுல் என்ன?

எல்லா மொழிகளிலும் பேசும் உரிமை அளிக்கப்பட்டால், அது தேசிய ஒருமைப்பாடாக மட்டுமல்லாமல், இயற்கையான ஒருமைப்பாடாகவும் இருக்கும்.

இந்த மசோதாவை ஏற்று நேர்மையுடன் செயல்படுத்தினுல், தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினை தன்னுல் தீர்வு பெறும்."

ஆதரவு தெரிவித்தார்

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த அப்துல் கனி தார் (சுயே.) மசோதாவுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தார்.

வி. சி. சுக்லாவின் முறையற்ற வாதம்

உள்துறையமைச்சில் மாநில அமைச்சராக இருக்கும் திரு.வி.சி. சுக்லா கூறியதாவது :—

"பதினைந்து தேசிய மொழிகளுக்கும் ஊக்கம் தருவதுதான் அரசாங்கத்தின் திட்டமாகும்.

மத்திய அரசாங்கத் தேர்வுகளில் பதினைந்து மொழிகளுக்கும் இடம் தரப்பட்டுள்ளது. இதைப் போன்று பல வகைகளில் அரசாங்க முயற்சி இருக்கிறது.

ஆனுலும், இந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை ஏற்றுக்கொண்டு, நாடாளுமன்றத்தில் 15 மொழிகளுக்கும் இடம் தரப்பட்டுவிட்டால், இரண்டு ஆட்சி மொழிகள் அல்ல -- 15 ஆட்சி மொழிகள் வந்ததாக ஆகிவிடும்.

இதில் மொழிபெயர்ப்பு போன்ற மற்ற பிரச்சினைகள் எதுவும் கலக்கவில்லை; அவற்றை நாம் சமாளித்துக் கொள்ளலாம்; ஆனுல் கொள்கையளவில் இந்த மசோதாவை ஏற்றுக் கொண்டால், 15 ஆட்சிமொழிகளுக்கு வழிவகுத்ததாகும்.

இப்பொழுதுள்ள அரசியல் சட்ட விதிப்படி, இந்தி—ஆங்கிலத்தில் பேச முடியாதவர்கள், தமது தாய் மொழியில் பேச அனுமதிக்கப்படுவார்கள்!

அரசியல் சட்டப்படி இந்தி ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாகவும் உள்ளது. இறுதியில், 'இந்தி மட்டுமே ஆட்சிமொழி' என்ற நிலைமை உண்டாகும் என்ற எதிர்பார்ப்பும் சூழ்நிலையும் இருக்கிறது.

இந்தி, ஆங்கிலம் என்று இருப்பதால், மற்ற மொழியினருக்குச் சில குறைபாடுகள் இருக்கின்றன; இருக்கத்தான் செய்யும்; அதை நாம் தவிர்க்க முடியாது.

15 மொழிகளையும் இங்கு வழங்குவதால் அதை நீக்கிவிட முடியாது. நாடாளுமன்றத்தில் 15 மொழிகளுக்கும் இடம் தந்து, மற்ற துறைகளில் சும்மா இருந்துவிட முடியாது. எனவே இந்த மசோதாவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை."

இரா. செழியன் வலியுறுத்தல்

விவாதத்திற்குப் பதிலளிக்க வந்த தோழர் இரா. செழியன் அவர்கள், முதலில் தமிழில் பேசத் துவங்கினுர்.

"மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே! மொழி உரிமை கோரி --- தாய்மொயில் பேசுவதற்கான ஒத்த உரிமையும் ஒத்த வாய்ப்பும் கேட்டு --- நான் கொண்டுவந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவுக்கு எல்லாக் கட்சியினரும் --- பேசிய எல்லா உறுப்பினரும் --- 'சிவநாராயண், உள்துறை அமைச்சர் ஆகிய இருவர் தவிர மற்ற அனைவரும் முழுமனதாக வரவேற்றுப் பேசியதறகு என் வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்; அவர்கள் தந்த ஆதரவை மதிக்கிறேன்; ஆர்வமிக்க பேச்சைக் கேட்டு மகிழ்கிறேன்; தாய்மொழி உரிமைக்கு அவர்கள் காட்டிய அக்கறைக்காக --- கட்சி வேறுபாடு இன்றி தந்த கருத்துரைக்காக -- அவாகளுக்கெல்லாம் எனது நன்றியறிதலை -- வணக்கத்தை எனது தாய் மொழியாம் தமிழிலேயே தெரிவித்துககொள்கிறேன."

நன்றியைத் தமிழில் தெரிவித்து, பிறகு தோழர் செழியன் ஆங்கிலத்தில் பேசத் துவங்கினுர் :—

"மன்றத் தலைவர் அவர்களே! இந்த மசோதாவிற்கு ஆதரவு தந்த கட்சியினருககும் உறுப்பினருக்கும் என் இதயங்கனிந்த நன்றியை இதயத்திலிருந்து கிளம்பும் என் தாய்மொழியில் தெரிவித்தேன். எந்த உரிமைக்காக நான் இந்த மசோதாவைக் கொண்டுவந்தேனே அந்த உரிமையை மதித்து என் தாய் மொழியில் பேசினேன்.

மசோதாவைக் கொண்டுவந்தவன் என்ற முறையில், நடந்த விவாதத்துக்குப் பதிலளிககும் கட்டத்தில நான் நிறகிறேன்.

இந்த மசோதாவுக்கு அரசாங்கச் சார்பில் அக்கறை காட்டவேண்டிய அமைச்சரை இந்த மன்றத்தில் காணேம். இது சரியா? பொறுப்பான செயலா?

மக்களின் கவனத்தையும், மன்றத்தின் பல பகுதியினர் ஆர்வத்தையும் கவர்ந்த ஒரு முக்கிய மசோதாவில், அமைச்சர் இங்கு இல்லையே......"

தோழர் கந்தப்பன் :—'அமைச்சர் வெளியேறியது சரியாகுமா?"

அவைத் தலைவர் :—" அமைச்சர் திரும்பி வந்துவிடுவார்."

தோழர் கந்தப்பன் :— "அதுவரையில் விவாதத்தை ஒத்திப போடலாமா?"

தோழர் செழியன் :— "யாருக்காக நான் வாதங்களை—பதிலை முன்வைக்க வேண்டுமோ அவர் இங்கு இல்லையென்ருல், இந்த விவாதம் அர்த்தமற்றதாகிறது."

அவைத் தலைவர் ;—" இந்தப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கு இருந்து, தரும் பதிலை கவனிக்க வேண்டும். அப்படி இல்லாதது, சரியானது அல்ல—முறையற்றது!

இரா. செழியன்—"இந்த விவாதத்தில் கலந்துகொண்ட அனைவரும்—சிவநாராயண், அமைச்சர் ஆக இருவர் தவிர, மற்றவர்கள் அனைவரும்—ஆதரித்துப் பேசினுர்கள். காங்கிரசுத் தரப்பில் பேசிய போகரா, சிந்தாமணி பானிக்கிரகி, ரன்தீர் சிங் ஆகியோர் ஆதரித்துப் பேசினர்......

ஓர் உறுப்பினர்:—"சேத் கோவிந்த தாஸ்கூட!"

இரா. செழியன் :— "அதையும் நான் மறந்துவிடவில்லை."

விவாதத்தைத் துவங்கிய நேரத்தில், 1927-ல் சேத் கோவிந்த தாஸ் கொண்டுவந்த தனி நபர் தீர்மானம் பற்றிக் குறிப்பிட்டேன்.

அப்பொழுது ஆங்கில ஆட்சியில் இருந்த மத்திய சட்டசபையில், 'ஆங்கிலத்துடன், இந்தி, உருது ஆகிய மொழிகளுக்கும் இடம் தரவேண்டும்' என்று சேத் கோவிந்த தாஸ் ஒரு தீர்மான மூலம் வலியுறுத்தினுா. அந்தத் தத்துவத்தை---தர்க்கத்தைச் சற்று விரிவடையச் செய்து, இந்தியல்லாத மற்ற இந்திய மொழிகளுககும் இந்த மாமன்றத்தில் நான் இடம் கேட்கிறேன். எனது கோரிக்கையை சேத் கோவிந்த தாஸ் ஆதரித்தது எதிர்பார்க்க வேண்டிய ஒன்றே யாகும்.

முதலில நான் குறிப்பிட்டது போல, இந்தியாவில் உள்ள மொழிப் பிரச்சினை முழுமையாகவோ, ஆட்சிமொழிப் பிரச்சினையின் தன்மையை விரிவான வகையிலோ ஆராய நான் முன வரவில்லை.

இந்த மசோவில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையே முன்வைக்கப்பட்டுள்ளது; 'நாடாளுமன்றத்தில் எந்த மொழிகளை வழங்க அரசியல் சட்டப்படி நாம அனுமதிக்கலாம்' என்பதுதான் அது!

பக்கத்திலுள்ள இலங்கைத் தீவுக்குச் சென்ருல்--அங்குள்ள நாடாளுமன்றத்தில்--தமிழ் உறுப்பினர்கள் தமிழில் பேச அனுமதிக்கப்படுகிருர்கள்; அவர்கள் பேசுவது அப்படியே குறிப்பேட்டில் இடம் பெறுகிறது.

சிங்கப்பூருக்குச் சென்ருல், அங்கே சீன மொழி—மலேசிய மொழி—தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் அனுமதிக்கப்படுகின்றன; மலேசியாவிலும் இதே போல தமிழுக்கு இடம் தரப்படுகிறது.

இலங்கையில் — மலேசியாவில் —சிங்கப்பூரில் — தமிழுக்குக் காட்டப்படும் மதிப்பு---தரப்படும் உரிமை இந்தியாவில் காட்டப்படவில்லை; இந்த மாமன்றததில் தரப்படவில்லை!

சின்னஞ்சிறு இடமாக உள்ள சிங்கபபூரில நான்கு மொழிகள் அனுமதிக்கப்படுகின்றன—அங்குளள நாடாளுமன்றத்தில்!

ஆனுல், பெரிய இந்தியாவில்—ஒரு துணைக்கண்டம்போல் பரந்து கிடக்கும் இந்தியாவில்—இரஷ்யாவைவிட்டு மற்ற ஐரோப்பா முழுவதையும் தன்னுள் அடககவல்ல நிலப்பரப்பை உடைய இந்தியாவில்—15-மொழிகளுக்கு இடம் தரப்படவில்லை. ஏன்? தர முடியாதா, தரக்கூடாதா? தருவதற்கான பெருந்தன்மை உங்களிடமில்லையா? உரிமையைப் பெறுவதற்கான தகுதி எங்களுக்கு இல்லையா?

அரசாங்கச் சார்பில் குறுக்கிட்ட அமைச்சர் சுக்லா அவர்கள் ஒன்றை வெளிப்படையாகக் கூறிவிட்டார்—'நடைமுறையில் இதைச் செயல்படுத்த முடியாது' என்று அவர் கூறவில்லை —; இந்த 'மசோதாவை நிறைவேற்றி விட்டால், அதைச் செயல்படுத்துவது முடியாத காரியமல்ல', என்கிருர். ஆக எது தடையாக இருக்கிறது?

'இந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை' என்கிருர்.

'எல்லாத் தேசிய மொழிகளுக்கும் ஒத்த வாய்ப்பு இங்கு தரப்பட வேண்டும்' என்று இந்த மன்றத்தில் பெரும்பான்மையினர் ஆதரித்ததை அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிருர்.

நடைமுறையில் உள்ள சங்கடங்களைக் காட்டி அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியாது.

சோவியத் இரஷ்யாவில் 18 மொழிகள் பேசப்பட வாய்ப்பு இருக்கிறது என்பதை பேராசிரியர் இரேன் முகர்ஜி சுட்டிக் காட்டினுர்.

கன்னடத்தில் பேசிய நண்பர் படேல், 'சுழல் மாடம் கட்டுவதற்கும், குளிக்கும் அறை அமைப்பதற்கும், வானவெடி விடுவதற்கும், மற்றும் எவ்வளவோ வகைகளில் வெளி நாட்டினரைப் பார்த்து வீண் செலவு செய்யும் இந்த அரசாங்கம், சோவியத் அரசாங்கம் செய்வதைப் பார்த்து ஏன் 13 மொழிகளுக்கும் இந்த மன்றத்தில் உரிமை தரக்கூடாது' என்று கேட்டுக்கொண்டார்.

கனம் அமைச்சர் அளித்த பதிலில் குழப்பம் இருக்கிறது.....

ஓர் உறுப்பினர் :—" முழுக்க முழுக்கக் குழப்பம்!"

இரா. செழியன் :—"அதனுல் தான் அங்கு இருக்கிருரோ என்னவோ தெரியாது!

'அரசியல் சட்டப்படி. இப்பொழுதும் ஒருவர், தம் தாய் மொழியில் பேசலாம்' என்ருர். அரசியல் சட்டத்தைச் சரியாக அவர் பார்க்கவேண்டும்.

"நாடாளுமன்றத்தில், இந்தி அல்லது ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும்; இந்தி அல்லது ஆங்கிலததில் தெளிவாகப்பேசும் ஆற்றல் ஒருவருக்கு இல்லையென்று ஏற்பட்டால், அவருடைய தாய்மொழியில் அவர் பேச அவைத் தலைவர் அனுமதி தரலாம்" என்று இருக்கிறது.

இதில் இரண்டு முக்கியப் பகுதிகள் இருக்கின்றன. ;காங்கிரசுத் தரப்பிலிருந்து ரண்தீர் சிங் இந்தியில் பேசினுர்; அவர் ஒரு வழக்குரைஞர்; இந்தி, ஆங்கிலம் இரண்டும் அவருக்குத் தெரியும்; சில சமயங்களில் அவர் இந்தியில் பேசுகிருர்; சில சமயங்களில் ஆங்கிலத்தில் பேசுகிருர். இன்றைக்கு அவர் இந்தியில் பேசினுர்.

இந்தி—ஆங்கிலம் இரண்டும் தெரிந்த ஒருவர், இந்தியிலோ, ஆங்கிலத்திலோ பேசலாம்; அது அரசியல் சட்டப்படி உள்ள உரிமை!

எனக்கு தமிழ், ஆங்கிலம் இரண்டும் தெரிகிறது என்ருல் எனக்குத் தமிழில் பேசும் உரிமை கிடையாது—ஆங்கிலத்தில் மட்டும்தான் பேசியாக வேண்டும்!

இந்திக்காரர்களுக்கு உள்ள வாய்ப்பு — உரிமை மற்ற மொழிக்காரர்களுக்கு ஏன் தரக்கூடாது?

இரண்டாவதாக— இந்தியில், ஆங்கிலத்தில் பேசத் தெரியாதவர்கள் தமது தாய்மொழியில் பேச அவைத் தலைவரால் அனுமதிக்கப்படலாம்.

இந்தி அல்லாத மொழியினர் தமது தாய்மொழியில் நேரடியாகப் பேசமுடியாது.

மற்ற இரண்டு மொழிகளும் தெரியாது என்ருல்தான் அந்த அனுமதி கிடைக்கும்; ஏன் இந்தப் பாகுபாடு?

அவைத் தலைவரின் பெருந்தன்மை-நேர்மையான மனப்பான்மை – இவற்றின் உதவியால் ஒருவருக்கு அனுமதி கிடைக்கலாம். நான் கேட்பது அனுமதி அல்ல – உரிமை!

என் தாய்மொழியில் என் கருத்தைத் தெரிவிக்கும் உரிமை எனக்கு அரசியல் சட்டப்படி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் பேசுவது மற்றவர்களுக்கும் புரியவேண்டும்; இல்லையாயின், நான் பேசுவதில் அர்த்தமில்லை!

தேசிய மொழிகள் அனைத்துக்கும் ஊக்கம் தருவதாக அமைச்சர் கூறினுர். மத்திய அரசாங்கத் தேர்வுகளில் 15 தேசிய மொழிகளுக்கும் இடம் தரப் போவதாக அமைச்சர் எடுத்துக் காட்டினுர்.

மத்திய அரசாங்கத்தில் வேலை பார்க்க வருபவர்களைத் தேர்ந்தெடுக்க அந்தப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பரீட்சைகளில் 15 மொழிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக நாங்கள் போராடியுள்ளோம். இந்த மன்றத்தில் நான் அதற்காக வாதாடி, இதே அமைச்சர்களிடமிருந்து உறுதிமொழி பெற்றேன்.

மத்திய அரசில் பணியாற்ற வருபவர்களுக்கு 15 தேசிய மொழிகளிலும் வாய்ப்புத் தரப படுகிறது; அவர்களுக்குத் தரப்படும் வசதியை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தரக்கூடாதா?

பத்து இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாக வரும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ன தவறு செய்துவிட்டார் -- உங்கள் தண்டனைக்கு ஆளாக?

"இந்தி ஆட்சி மொழி; ஆங்கிலம் துணை ஆட்சி மொழி; இந்த இரண்டையும் தவிர மற்ற மொழிகளையும் நாடாளுமன்றத்தில் அனுமதித்தால், 15 ஆட்சிமொழிகள் வந்துவிடும்" என்று கனம் அமைச்சர் ஒரு விசித்திர வாதத்தைக் கிளப்பினுர்.

இரண்டு ஆட்சி மொழிகளை வைத்துக்கொண்டுள்ள மத்திய அரசில் பணிபுரிய வருபவர்களைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சையில் 15 மொழிகளை அனுமதிக்கிருர்களே -- அங்கு மட்டும் ஆட்சிமொழிகள் 15-ஆகப் பெருகிவிட்டதா?

(4-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றத்தில் செழியன் பேச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு 15 மொழிகளை அனுமதிக்க எவ்வளவு நியாயம் இருக்கிறதோ அதைவிட அதிகமான நியாயம் இந்த மன்றத்தில் 15 மொழிகளை வழங்க இருக்கிறது......

பேராசிரியர் இரேன் முகர்ஜி :- "ஓர் ஒழுங்குப் பிரச்சினை; சம்பந்தப்பட்ட அமைச்சர் அங்கே இல்லை. மற்ற துறையினர்—யார் யார் எந்தத் துறையில் அமைச்சர் என்று தெரியாது—இங்கு இருக்கலாம்; ஆனாலும், உள்துறையைச் சேர்ந்த அமைச்சர், துணையமைச்சர் யாராவது ஒருவர் இங்கு இருந்து, விவாதத்தைக் கவனிக்க வேண்டாமா?"

அவைத் தலைவர் :—"உள்துறை அமைச்சர் ஒருவராவது இங்கு இருந்திருக்க வேண்டும்."

ஓர் உறுப்பினர் :—"சட்டப் பிரிவைச் சேர்ந்த துணையமைச்சர் இங்கு இருக்கிறார்."

இரா. செழியன் :—"இது உள்துறை அமைச்சரால் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை; வேண்டுமானால், நான் என் பேச்சை நிறுத்திக்கொள்கிறேன். பிறகு அவர் வந்ததும் தொடங்கலாம்."

இரேன் முகர்ஜி :—"உள்துறை அமைச்சர்—ஒரு மாநில அமைச்சர்—ஒரு துணை அமைச்சர்—இவர்களில் ஒருவர்கூட இங்கு ஏன் இல்லை?"

துணைத் தலைவர் :- "அவையை எப்படி மதிக்கிறார்கள் என்பது முக்கியப் பிரச்சினை; தனிப்பட்ட பிரச்சினை அல்ல."

திரு. அன்பழகன் :—"துணைத் தலைமையமைச்சர் வந்துள்ளார். மசோதாவின் கருத்தை அவர் ஒப்புக்கொண்டால், விவாதத்தை விரைவில் முடித்துக்கொள்ளலாம்."

துணைத் தலைவர் :—"துணைத் தலைமையமைச்சர் இங்கு இருப்பது போதும்; விவாதத்தை முடிக்கலாம்."

மொரார்ஜி தேசாய் :—"நான் ஒரு துணை அமைச்சராகப் பணியாற்றுவேன்."

இரா. செழியன் :—"துணைத் தலைமையமைச்சர், பதவியில் உயர்ந்தவர்; ஆனால், துணை அமைச்சருக்கு -- உள்துறைத் துணை அமைச்சருக்கு ஈடாக அவரை ஆக்கவேண்டாம்; இந்தப் பிரச்சினையில் உள்துறைப் பிரிவைச் சேர்ந்த அமைச்சர் யாரேனும் இருக்க வேண்டும்."

துணைத் தலைவர் :—துணைத் தலைமையமைச்சர் இருக்கிறார் --- அது போதுமே."

தென்னேட்டி விசுவநாதன் :—"பிரசசினை அவ்வளவு சுலபமானதல்ல; உள்துறை அமைச்சர் சுக்லா தமது பேச்சை முடித்துக்கொண்டதும், ஒன்றும் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறிவிட்டார்; அதுபற்றி இங்கு கேள்வி பிறந்ததும், காங்கிரசுக் கொறடா வெளியே சென்று ஆள் தேடினார்; 'முதலில் இந்தப் பக்கம் தென்படுகிற ஆண் மகனை என் இளவரசிக்கு மணம் முடிக்கிறேன்' என்று கதைகளில் வருவதைப் போல, வெளியே முதலாவதாகக் கிடைத்த அமைச்சரை உள்ளே அழைத்து வந்தார்; இது முறையான செயல் அல்ல -- அவையை அவமதிப்பதாகும்."

துணைத் தலைவர் :—"உள்துறைத் துணையமைச்சர் இப்பொழுது வந்துவிட்டார்."

இரா. செழியன் :—"எப்படியோ ஒரு உள்துறை அமைச்சரைக் கொண்டுவந்துவிட்டார்கள்; அவருக்கு இந்தப் பிரச்சினையின் முழு விவரம் தெரியும் என்ற நம்பிக்கையில் நான் தொடருகிறேன்.

அரசியல் சட்டப் பிரிவையும், மொழிபெயர்ப்பு வசதியையும் சிலர் பிணைத்துப் பேசினர்.

ஒன்றுக்கொன்று பின்னப்பட்டதல்ல --- அரசியல் சட்டம் 1950-ல் இயற்றப்பட்டது --- அப்பொழுது இந்தி, ஆங்கிலம் இரண்டையும் நாடாளுமன்ற மொழிகளாக 120-வது பிரிவில் எழுதிவைத்தார்கள்.

ஒரே சமயத்தில் மொழிபெயர்க்கும் வசதி இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கிடைத்தது; 15 ஆண்டுகளாக அந்த வசதி இல்லாதிருந்தது.

அரசியல் சட்டத்தில் வகுக்கப்பட்ட மொழிகளுக்கும் -- மொழிபெயர்ப்புக்கும் தொடர்பு கிடையாது. ஆக, இந்த மசோதாவுக்கும் மொழிபெயர்ப்பு முறைக்கும் தொடர்பு கிடையாது.

மொழியெயர்ப்பு முறையை நமது வசதிக்கேற்றபடி -- தொழில்நுட்ப முறைக்கு ஏற்றபடி நாம வகுத்துக்கொள்ளலாம்.

இப்பொழுதுள்ள இயந்திர நுட்பங்களை வைத்து, முதலாவது இப்படி ஆரம்பிக்கலாம். அரசியல் சட்ட 120-வது பிரிவில், 15 தேசிய மொழிகளுக்கும் இடம் தரலாம்; அதன்படி, இங்குள்ள உறுப்பினர்கள் தமது தாய்மொழியில் பேசும் உரிமை கிடைக்கிறது.

ஆரம்பத்தில் இப்பொழுதுள்ள முறையை வைத்து, ஆங்கிலம் – இந்தி ஆகிய இரண்டு மொழிபெயர்ப்புகளையும் பயன்படுத்தலாம்......

துணைத் தலைமையமைச்சர் :— "இது ஆரம்பம்."

செ. கந்தப்பன் :— "நீங்கள் அங்கே இருக்காமல் போகலாம்; நாங்களும் வராமல் இருக்கலாம்; ஆனால், ஒரு முறையை ஆரம்பித்து வைக்கலாம்."

இரா. செழியன் :— "ஆரம்பத்தில் இப்படிச் செய்து, பிறகு மற்ற மொழிகளுக்கும் அந்த மொழிபெயர்ப்பு முறையை விரிவுபடுத்தலாம்.

'மொழிபெயர்ப்பு' என்பது, தரப்படும் உரிமையைச் சரியாகப் பயன்படுத்தும் முறை; நான் கேட்பது -- அந்த உரிமையை!

அரசியல் சட்டத்தின் 120-வது பிரிவு திருத்தப்படாத வரையில், இந்தி பேசாத மற்றவர்களுக்கு அந்த உரிமை கிடையாது!

என் மொழியில் பேச – என் தாய் மொழியில் என் கருத்துக்களைக் கூற உரிமை கேட்கிறேன் – நீதி கேட்கிறேன்! இந்திய சனநாயகத்தின் உச்சக் கட்டமாக விளங்கும் இந்த மாமன்றத்தில் அரசு உரிமைக்கு இடம் கேடகிறேன்!

உள்துறைத் துணை அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறேன் —'இந்த மசோதாவை ஒப்புக் கொள்ளுங்கள்' என்று!-- நடைமுறை விவரங்களைப் பிறகு விவாதித்து முடிவு செய்யலாம்.

[உள்துறைத் துணையமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி பதில் கூறுமல் பேசாது இருந்தார்.]

இரா. செழியன் :—"துணைத் தலைமையமைச்சரைப் பார்த்துக் கேட்கிறேன்—'என் மசோதாவின் நோக்கத்தை கொள்கையளவிலாவது ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று; நடைமுறையில் இடையூறுகள் இருந்தால், நாம் கலந்து பேசலாம்---வழிவகை காணலாம்.

மொரார்ஜி தேசாய் :—"கொள்கை அடிப்படையில், இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்."

இரா. செழியன் :—"எனது மசோதாவை நான் வலியுறுத்துகிறேன்."

[இதன் பிறகு மசோதா ஓட்டுக்கு விடபபட்டது. மொரார்ஜி தேசாயும் காங்கிரசுக்காரர்களும் மசோதாவை எதிர்த்தனர்: எதிர்க் கட்சியினர் ஒருமனதாக ஆதரித்தனர்; தீர்மானம் தோல்வியுற்றது.]

சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல்

25--8--68 காலை 10-மணி

ஏற்கனவே விடுததிருந்த அறிவிப்பினையொட்டி சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல் 25—8—68 ஞாயிறு காலை 10 மணிக்கு சி. சிட்டிபாபு எம்.பி. அவர்களை ஆணையாளராகக் கொண்டு சேலம் நகர் விசயராகவாச்சாரியார் திடலில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி 20—8—68 செவ்வாய் காலை 10 மணிக்கு நாமக்கல் பி எஸ் ஆர். திடலில் நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல் நடைபெறும். தோழர் ஓ. எஸ். பாலசுந்தரம், தேர்தல் ஆணையாளராகப் பொறுப்பேற்றுத் தேர்தலை நடத்தி வைப்பார்.

11—8—68 அன்று நடைபெறவிருந்த வட்டக் கழகத் தேர்தலுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் அடையாளச் சீட்டுகளையே கொண்டுவர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சென்னை மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு:

"15—8—68 ஞாயிறு காலை 10 மணியளவில், தேனாம்பேட்டை 'அன்பகத்'தில், சென்னை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து முடிவு செய்யப்பட்விருப்பதால், பிரதிநிதிகள் அனைவரும் தவருது வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிருர்.

தொழிலதிபர்களுக்குத் தொழிலமைச்சர் வேண்டுகோள்

சென்னை, ஆக. 11—

தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டுகளைப் பிடிக்குமாறும், இதற்குப் பொருட்களின் தரம் உயர்ந்ததாக இருக்குமாறு கவனம் செலுத்த வேண்டுமென்றும், தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், தொழிலதிபர்களைக் கேட்டுக் கொண்டார்.

அசோகா ஓட்டலில் நடைபெற்ற கார்டன் உட்ராப் கம்பெனியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர், கம்பெனியின் வளர்ச்சியைப் பாராட்டினார்.

மேலும் அவர் பேசுகையில், தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல், மேலும் முன்னேறி வளர்ச்சி காணுமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆகஸ்டு 15

விடுதலை நாள் விழாக் கூட்டம்

15--8--68 வியாழன் மாலை 7-மணிக்கு

சென்னை -- திருவல்லிக்கேணி கடற்கரையில்

தலைவர்: ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.

தமிழக முதல்வர்

பேரறிஞர் அண்ணா

அவர்களும்

மாண்புமிகு அமைச்சர்களும் பேசுவர்.

—விடுதலை நாள் விழாக் குழுவினர் (தி மு க.)

கோவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

18---8---68 காலை 10-மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி கோவை மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் 18—8—68 காலை 10-மணிக்கு கோவை நகரக் கழகக் கட்டிடத்தில் ஆணையாளர் ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வன்முறையைத் தவிர்க்க ஒழுங்கு நியதி உருவாக்கத் திட்டம்

'அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழக அரசு தயாராக இருக்கிறது'

சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

திருச்சி, ஆக. 13—

"அரசியல் கட்சிகள் நடத்தும் கிளர்ச்சிகளில் வன்முறை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு ஒழுங்கு நியதி ஒன்றை உருவாக்குவதற்காக மாநிலத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தமிழக அரசு தயாராக இருக்கிறது"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் இதுபற்றிக் கூறியிருப்பதாவது :—

"கிளர்ச்சிகளை நடத்த எதிர்க் கட்சிகளுக்கு உள்ள சனநாயக உரிமைகளைத் தமிழக அரசு முழுமையாக உணர்ந்திருக்கிறது; கண்ணீர்ப் புகைக் குண்டு வீசவும், தடியடி நடத்தவும் அரசு தயாராக இல்லை.

மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள், அரசுடன் கூடிப் பேசி. கிளர்ச்சிகளில் போலீசுத் தலையீட்டைத் தவிர்ப்பதற்கு ஒரு ஏற்பாட்டை உருவாக்கலாம்; கிளர்ச்சிகளில் வன்முறை தலைதூக்கினால் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அரசியல் கட்சிகள் கூறலாம்.

வன்முறையைத் தாங்கள் கண்டிப்பதாக எல்லாக் கட்சிகளும் கூறுகின்றன. அரசியல் கட்சிகளின் சனநாயக உரிமைகளைத் தி. மு. க. அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இந்த உரிமைகளைக் குறைக்க விரும்பவில்லை.

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல்

18---8---68 காலை 10 மணிக்கு

நீலகிரி மாவட்டக் கழகத் தேர்தல் 18—8—68 காலை 10 மணிக்கு உதகை நகரிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். தேர்தல் ஆணையாளர் : வை. இரத்தினவேலு பி ஏ.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

மாவட்டப் பிரதிநிதிகள் பட்டியல்

ஒரு திருத்தம்

10—8—68 அன்று வெளியான 'நம் நாடு' சிறப்பிதழில், சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்ட மாவட்டப் பிரதிநிதிகள் பட்டியலில், 'டி. கே. மாதவன்' இருக்கவேண்டியது, 'டி. கே. தென்னவன்' என்று பிரசுரமாகியிருக்கிறது; அதனை, 'டி. கே. மாதவன்' எனத் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.